05.04.2025

O.S.No.221/2016

பி.வா.சா.5.திருமதி.அமலி த.பெ.ராஜசேகர்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**1 ம் பிரதிவாதி தரப்பு** குறுக்கு விசாரணை

நான் தாக்கல் செய்த நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனது கணவர் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் எனது கணவர் சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார் என்றால் சரிதான். அவர் சாட்சியம் அளிக்க விட்டுபோனதை நிரப்புவதற்காக என்னை வைத்து சாட்சியம் அளிக்க வைத்துள்ளார் என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலத்தில் உள்ள எனது முகவரியான அன்னை இல்லம், கடச்சனேந்தல் முகவரிக்கு தான் எனது ஆதார் அட்டை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எனது நிருபண வாக்குமூலத்தில் தாவா சொத்தில் அமைந்துள்ளதாக சொல்லப்படும் வீட்டிற்கான கதவு எண் நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கான புல எண்னை பற்றியும் எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கான நான்குமாலை பற்றியும் நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்தோனி என்பவர் என்னை வளர்த்து வந்ததாக சொல்வதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் உயிலில் குறிப்பிட்டுள்ளார். அதேபோல் சம்மத பத்திரத்திலும் குறிப்பிட்டுள்ளார். வேறு ஆவணம் எதுவும் இல்லை.

2. என்னை சிறுவயதில் இருந்தே அந்தோனி என்பவர் என்னை வளர்த்து வந்தார். நான் எனது தாத்தா அந்தோனியிடம் திருச்சியில் வளர்ந்து வந்தேன். நான் திருச்சியில் வளர்ந்து படித்து வந்தேன் என்பதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனக்கும் எனது கணவருக்கும் எங்கு வைத்து திருமணம் நடைபெற்றது என்றால் ராமநாதபுரத்தில் நடைபெற்றது. அந்த சங்கதியை எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அதற்கான ஆவணத்தையும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பொதுவாக ஒரு நபர் இறந்தவுடன் அவரது படுக்கை அனைத்தையும் எடுத்து வெளியே போடுவார்கள் என்றால் எங்கள் சம்பரதாயப்படி அவ்வாறு செய்யமாட்டார்கள். இறந்துபோன அந்தோனியின் மெத்தை ஒரு வாரம் கழித்து வெளியே எடுக்கப்பட்டது. அந்த விபரத்தை எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்தோனி எழுதி வைத்தாக சொல்லப்படும் உயிலை நாங்கள் தகுதிகாண் செய்யவில்லை (Probate) என்றால் சரிதான்.

3. தாவா சொத்தில் எப்போது எத்தனை மாங்கன்றுகள் வைத்தோம் என்று எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். தாவா சொத்தை அபகரிக்கும் வேண்டும் என்ற எண்ணத்தில் சட்டப்படி செல்லுபடியாகாத உயில் மற்றும் சம்மதகடிதத்தின் அடிப்படையில் அந்தோனி என்னை வளர்த்தார் என்று தவறான தகவலை சொல்லி எனக்கு உரிமை இல்லாத வழக்கு சொத்தில் உரிமை இருப்பதாக பொய்யாக எதிர்வாதம் புரிந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாவா சொத்தில் உள்ள வீட்டில் வசித்து வருவதாக சொல்லுவதால் உண்மையிலேயே அங்கு வசித்து வந்தால் அந்த முகவரியை காட்டுவதற்கான ஆதார் அட்டையை நான் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும், தாவா சொத்து ஒருபோதும் எனக்கோ, எனது கணவருக்கோ பாத்தியப்பட்டது இல்லை என்றாலும் நாங்கள் ஒருபோதும் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்தது இல்லை என்றால் சரியல்ல.

<u>**3 ம் பிரதிவாதி தரப்பு** குறுக்கு விசாரணை</u>

அந்தோனி பாதிரியார் எனது தாத்தா ஆவார். அவர் என்னை எதன் அடிப்படையில் திருச்சி அழைத்து சென்று படிக்கவைத்தார் என்றால் அவரது உடன் பிறந்த சகோதரியின் பேத்தி என்ற முறையில் என்னை படிக்க வைத்தார். நான் அங்கிருந்து பள்ளி படிப்பை முடித்து ஆசிரியர் பயிற்சி படிப்பும் முடித்தேன். அதன்பின்பு அவர் நடத்தி வந்த ஜெரிக்கோ பள்ளியில் நான் சிறிது காலம் வேலை பார்த்தேன். திருமணம் ஆன பின்பு நான் வேலைக்கு செல்லவில்லை. எனக்கும் 2 ம் பிரதிவாதிக்கும் எனது தாத்தா அந்தோனி தான் திருமண ஏற்பாடு செய்தார். எனது தாத்தா அந்தோனிக்கு உடல்நிலை சரியில்லாமல் போனதால் அவரை பார்த்து கொள்வதற்காக நாங்கள் கிடாரிப்பட்டிக்கு வந்தோம் என்றால் சரியல்ல. அதற்கு முன்பே 1998 ஆம் ஆண்டே நாங்கள் கிடாரிப்பட்டிக்கு வந்து அவருடன் இருந்தோம். எனது கணவர் அவருக்கு கார் ஓட்டி வந்தார். அவர் எழுதி வைத்த உயிலை பற்றி யார் என்னிடம் சொன்னது என்றால் நாங்கள் அந்த காட்டிற்குள் இருக்கமாட்டோம் என்று சொன்னதால் தாவா சொத்தின் 1 ஏக்கர் நிலத்தை வைத்து தொழில் செய்து கொள்ளும்படியும் அதில் உள்ள வீட்டில் இருந்து கொள்ளும்படியும் எங்களுக்கு சம்மதகடிதம் கொடுத்தார். அவர் எழுதி வைத்த உயிலை பற்றி அவர் இறந்த பின்பு அவரது பொருட்களை ஒதுங்க வைத்தபோது அந்தோனிசாமி எடுத்து கொடுத்தார். அவர் எனக்கு சித்தப்பா முறை ஆவார்.

2. அந்தோனிசாமி திருச்சியில் அந்தோனி பாதிரியார் நடத்திவந்த நிறுவனத்தில் அவருடன் கவனித்து வந்தார். அந்தோனி பாதிரியார் இறந்தவுடன் அவரது சகோதரர் மகன் என்ற முறையில் அந்தோனிசாமி அடக்கம் செய்ய வந்தார் என்றால் சரிதான். அவர் தான் சம்மதகடிதம் என்ற உயிலை எடுத்து கொடுத்தார் என்றால் சரிதான்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

இந்த வழக்கின் வாதி யார் என்றால் பிரான்சிஸ் பாஸ்டின் ஆவார். தாவா சொத்தின் மொத்த பரப்பளவு 6 ஏக்கர் 7 செண்ட் என்றால் சரிதான். அந்த சொத்து முழுவதும் வாதியின் அனுபவத்தில் இருப்பதாக சொல்லிதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். திருச்சியில் அந்தோனி பாதிரியார் ஜெரிக்கோ டிரஸ்டை எப்போது ஆரம்பித்தார் என்றால் 1986 ல் ஆரம்பித்தார். அவர் 1983 ல் தான் ஆரம்பித்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் அவருடன் இருந்து படித்தது வளர்ந்தது எல்லாம் திருச்சியில் தான் என்றால் சரிதான். அந்தோனி பாதிரியார் நடத்தி வந்த டிரஸ்ட் சம்மந்தப்பட்ட ஹாஸ்டலில் இருந்து நான் படித்து வந்தேன் என்றால் நான் ஹாஸ்டலில் இல்லை ஜெரிக்கோ செண்டரில் எனக்கு என்று தனியாக எனது தாத்தா ரூம் ஒதுக்கி கொடுத்து அங்கிருந்து நசரேத் என்ற பகுதியில் இருந்த பள்ளியில் படித்து வந்தேன். ஜெரிக்கோ செண்டரில் ஜேசுராஜ் என்ற அன்பரசன் தலைமை பொறுப்பில் இருந்தார். அவருக்கும் அந்தோனி பாதிரியாருக்கும் என்ன உறவு முறை என்றால் உடன்பிறந்த சகோதரர்கள் ஆவார். அந்தோனி பாதிரியார் ஜேசுராஜ் என்ற அன்பரசன் 19.03.1997 தேதியில் உயில் எழுதி வைத்த விபரம் தெரியுமா என்றால் அவ்வாறு உயில் எதுவும் எழுதி வைக்கவில்லை. அவர் உயில் எழுதி வைத்தது உண்மை என்றாலும் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. ஜேசுராஜ் என்ற அன்பரசனுக்கு எழுதி வைத்த உயில் அடிப்படையில் 2006 ஆம் ஆண்டு இந்த வாதிக்கு தாவா சொத்தை வெண்ணிலை ஒப்பந்தம் எழுதி கொடுத்தார் என்றால் தெரியாது. அதன் தொடர்ச்சியாக 2009 ஆம் ஆண்டு மற்றொரு கிரைய ஒப்பந்தம் எழுதி அவர்கள் பதிந்து கொண்டார்கள் என்றால் சரிதான். ஆனால் அதற்கு முன்பே 2008 ஆம் ஆண்டு என்னிடமும் எனது கணவரிடமும் வாதியும், ஜேசுராஜ் என்ற அன்பரசனும் எங்களிடம் இருக்கும் உயிலை வைத்து தாவா சொத்திற்கு பணம் கொடுப்பதாகவும்,

சொத்தை விட்டு கொடுக்க கேட்டார்கள். மேற்படி சங்கதிகள் அனைத்தும் இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. ஜேசுராஜ் என்ற அன்பரசனுக்கு எழுதி வைத்த உயில் மோசடியானது என்ற விபரம் எனது கணவர் சொல்லிதான் தெரியும் என்றால் சரிதான். தாவா சொத்தில் 1 ஏக்கர் எங்களுக்கு பாத்தியம் என்று உரிமை கொண்டாடும் நிலத்திற்கான சர்வே எண். 385/1பி 2பி ஆகும். அந்த சொத்து தற்போது நான் எனது கணவருக்கு தான செட்டில் மெண்ட் கொடுத்தால் உட்பிரிவு செய்யப்பட்டு சர்வே எண். 385/4 என உள்ளது. தாவா சொத்திற்கான நான்குமால் கிழக்கே எனக்கு பாத்தியப்பட்ட இடம், தெற்கே எனக்கு பாத்தியப்பட்ட இடத்தில் போடப்பட்ட பொது நடைபாதை, வடக்கே கிருஷ்ணன் புஞ்சை, மேற்கே தென்வடல் ரோடு. மேற்படி சொத்திற்கு நாங்கள் ஆவணம் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அனைத்து ஆவணங்களும் தாக்கல் செய்துள்ளோம். அவ்வாறு எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்தில் 2016 ஆம் ஆண்டு இந்த நீதிமன்றத்தில் வாதி இடைகால உறுத்துக்கட்டளை உத்தரவு பெற்று மாங்கன்றுகள் நட்டுள்ளார் என்றால் சரியல்ல. நாங்கள் தான் மாங்கன்றுகள் நட்டியுள்ளோம்.

3. மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின்படி எனது பெயரில் உள்ள பட்டா ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். ஆனால் அதில் எங்களை தரப்பினராக சேர்க்காமல் மோசடியாக செய்து விட்டார்கள். மாண்பமை சென்னை உயர் நீதிமன்ற உத்தரவின்படி தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு மின் இணைப்பு, வரி ரசீது ஆகியவற்றை வாதி பெயரில் மாற்றியுள்ளார் என்றால் மோசடியாக மாற்றியுள்ளார். நாங்கள் போலியான உயிலை வைத்து ஆவணங்கள் ஏற்பட்டுவிட்டதை அறிந்துதான் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம், மதுரை கிளை வாதிக்கு ஆதரவாக உத்தரவு பிறப்பித்துள்ளது என்றால் சரியல்ல. ஜெரிக்கோ டிரஸ்டில் அந்தோனிசாமி என்ன வேலை பார்த்தார் என்றால் அவரும் சேர்ந்து தான் அந்த நிறுவனத்தை நடத்தி வந்தார். அவர் அந்த பள்ளியில் தலைமை ஆசிரியராக இருந்தார் என்றாலும் எனக்கு விபரம் எதுவும் தெரியாமல் இருப்பதால் தான் நான் முறன்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

4. நான், எனது கணவர் மற்றும் அந்தோனிசாமி ஆகியோர் சேர்ந்து தாவா சொத்தை அபகரிக்கும் நோக்கில் போலியான உயிலை உருவாக்கி பொய்யான எதிர்வாதம் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. நானும் எனது கணவரும் ஒருபோதும் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்து வந்ததில்லை என்றாலும் சரியல்ல. நிருபண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் எனக்கு நேரடியாக தெரியாது எனது கணவர் மூலமாக தான் தெரியும் என்றால் சரியல்ல. எனது நிருபண வாக்குமூலம் ஏற்று கொள்ள கூடியது அல்ல என்றால் சரியல்ல.